தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1988, ஜனவரி 28, வியாழக்கிழமை

தை 14, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2019

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார் ''.

பின் விளையும் ஊதியத்தைக் கருதி இப்போது உள்ள முதலை இழந்துவிடக் காரணமான செயலை அறிவுடையவர் மேற்கொள்ள மாட்டார்.

1. அறிவிப்புகள்.

(அ) சில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தங்கள் எம்.எல்.ஏ. பதவிகளை ராஜிநாமா செய்துள்ளதாகத் தெரிவித்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கோர் அறிவிப்பு. இன்று காலை 9-45 மணி அளவில் தொலைபேசி மூலமாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களான திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன், திரு. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. கோ. செல்லப்பா, திரு. டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. கா. சொர்ணலிங்கம் ஆகியோர் எனக்கு அவர்கள் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவிகளை ராஜிநாமா செய்து விட்டதாகத் தொலைபேசியில் தெரிவித்திருக்கின்றார்கள். ............(கூச்சல்—குழப்பம்)......வந்து கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள்......(கூச்சல்—குழப்பம்).

(பல உறுப்பினர்கள் எழுந்து கோஷங்களை எழுப்பி கூச்சலிட்டுக் கொண்டு குழப்பம் விளைவித்தனர்.)

......................ஆகவே 12 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும் (கூச்சல்—குழப்பம்).

பின்னர் பேரவை முற்பகல் 10-05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

நண்பகல் 12-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு".

செய்யத் தகுந்த செயலையும் வழிகளையும் எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும். துணிந்த பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் சில உறுப்பினர்கள் பதவி இழப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அவையின் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களான திரு. நாவலர் நெடுஞ்செழியன், திரு. எஸ். பண்ருட்டி இராமச்சந்திரன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஆர். சௌந்திரராஜன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. செ. அரங்கநாயகம் ஆகியோர் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ்................(கூச்சல்—குழப்பம்)........கொடுத்தார்கள். ஆகவே, அவர்கள் கட்சித் தாவிவிட்டார்கள்........(கூச்சல்—குழப்பம்) என்பதைச் சொல்லி அவர்களை இந்த அவையிலிருந்து (கூச்சல்—குழப்பம்) ............கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்கீழ் பதவி இழக்கிறார்கள் என்று நடவடிக்கை எடுத்து, வெளியேற்றுகிறேன் (கூச்சல்—குழப்பம்).

(உறுப்பினர்கள் சிலர் கூச்சலிட்டுக் கொண்டு பேரவைத் தலைவரை நோக்கிப் பாய்ந்து பெரும் அமளி செய்தனர். மைக்குகள் முறிக்கப்பட்டன. நாற்காலிகள் உடைக்கப்பட்டன. பேப்பர் வெயிட்டுகள் வீசப்பட்டன.)

..............3 மணிக்கு அவை கூடும். (கூச்சல் குழப்பம்)

பின்னர் பேரவை நண்பகல் 12–07 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS